ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,560 — 1965 නොවැම්බර් 18 වැනි බ්‍රහස්පතින්දා — 1965.11.18
14,560 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

## மகா தேசாதிபதியின் பிரகடனங்கள்

ம. தே. கா. இல. என். 110/65

**இலங்கைத் தீவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் மகாதேசாதிபதியும் முதற்பெரும் படைத்தலைவரும், பிரித்தானிய ஏகாதிபத்திய அதி உத்தமவரிசை உறுப்பினரும் ஆகிய அதி உத்தமராம் வில்லியம் கொபல்லவ அவர்களிடமிருந்து**

(முத்திரை)

டபிள்யூ. கொபல்லவ.

திரு. முத்தையா இராஜநாயகம்,
திரு. நெவில் லிங்கன் அபேவீர,
திரு. செல்லையா லோகநாதன்,
திரு. அளவி இப்ராஹிம் மாக்கான் மரைக்கார்,
திரு. களுதேவகே சிரில் மதியூ,
திரு. மாக்கஸ் சந்ததாஸ பக்மிவெவ,
திரு. சோமச்சந்திர சாசனபால பெரேரா,
ஆகியோருக்கு.

வாழ்த்துக்கள் :

இதனைத்துப் பின்னர் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக விசாரணைக் குழுவொன்றை நியமிக்கவேண்டுமென எனக்குத் தோன்றுவதால் ;

இப்பொழுது ஆகவே, மகாதேசாதிபதி வில்லியம் கொபல்லவ ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, நேர்மை ஆகியவற்றில் மிக்க நம்பிக்கையும் உறுதியும் வைத்து (393 ம் அத்தியாயமான) விசாரணைக் குழுக்கள் சட்டத்தின் 2 ம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க, இத்தால் சகலரும் அறிய, மேற்கூறிய திரு. முத்தையா இராஜநாயகம், திரு. நெவில் லிங்கன் அபேவீர, திரு. செல்லையா லோகநாதன், திரு. அளவி இப்ராஹிம் மாக்கான் மரைக்கார், திரு. களுதேவகே சிரில் மதியூ, திரு. மாக்கஸ் சந்ததாஸ பக்மிவெவ, திரு. சோமச்சந்திர சாசனபால பெரேரா ஆகிய உங்களை, தனியார் துறையிலும் அரசாங்க ஆதரவில் நடைபெறும் கூட்டுத்தாபனங்களிலுமுள்ள முதலாளிகளுக்கும் ஊழியருக்குமிடையே இலாப பங்கீட்டுக்கான திட்டமொன்றை, விசேடமாக பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக, கையாளுதல் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காகவும், அவ்விடயங்கள் பற்றி நீங்கள் நடத்தும் விசாரணைகள் சம்பந்தமாக தேவையென நீங்கள் கருதும் சிபார்சுகளைச் செய்தற்காகவும், எனது குழுவினராக நியமிக்கிறேன் :—

(1) அத்தகைய இலாபப் பங்கீட்டுத் திட்டமொன்றின் எல்லையும் அளவும் ;

(2) இலாபப் பங்குகளாகக் கொடுக்கப்படவேண்டிய தொகைகளைக் கணிக்கும் அடிப்படையும் அவ்வண்ணம் கணிக்கும் விடயத்தில் இயைபுபடுத்தப்படவேண்டிய கொள்கைகளும், அத்தகைய தொகைகளைச் செலுத்தும் முறைகளும் ;

(3) அத்தகைய இலாபப் பங்கீட்டுத் திட்டமொன்றில், முதலாளிக்கு நட்டங்கள் ஏற்பட்டிருப்பினும், அவர் அவரது ஊழியருக்கு ஆண்டுதோறும் கீழெல்லைத் தொகையொன்றைச் செலுத்துமாறு கேட்கப்படவேண்டுமா என்பதும், இலாபங்களின் மட்டம் எப்படியிருப்பினும் ஊழியருக்கு இலாபப் பங்குகளாகக் கொடுக்கப்படவேண்டிய தொகைகள் விடயத்தில் மேலெல்லையொன்று இருக்கவேண்டுமா என்பதும், அப்படியாயின், அத்தகைய கீழெல்லைத் தொகையையும் அத்தகைய மேலெல்லையையும் கணிக்கும் அடிப்படையும், இலாபங்கள் அல்லது நட்டங்கள் முன்னே எடுத்துச் செல்லப்படவேண்டிய விதமும் அவைமுன்னே எடுத்துச் செல்லப்படவேண்டிய காலமும் ;

(4) ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேற்பட, ஊழியருக்குக் கொடுக்கப்படவேண்டிய இலாபப் பங்குகள் பின்போடப்பட்ட கொடுப்பனவுகள் என்ற முறையில் தேசிய சேமிப்புப் பத்திரங்களாக அல்லது அவர்கள் வரவில் முதலீட்டு நம்பிக்கைத்தாபனத்திடம் கட்டுப்பணங்களாக அல்லது மற்றும் வகையில் கொடுக்கப்பட வேண்டுமா என்பது ;

(5) இலாபப் பங்கீட்டு விடயத்தில் எழக்கூடிய பிணக்குகளைத் தீர்த்து வைத்தற்கான ஏற்பாடு உட்பட இலாபப் பங்கீட்டுத் திட்டமொன்றைப் பயன்படத்தக்க முறையில் நடைமுறைக்குக் கொண்டுவருதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தற்குக் கையாளப்படவேண்டிய முறைகள் ;

(6) மேலே குறிக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாகவும் அவற்றின் விசாரணையின்போதும் உங்களுக்கு முறையீடு செய்யப்படும் மற்றும் விடயம் யாதாயினும் ;

மேலும், குறித்த திரு. முத்தையா இராஜநாயகமாகிய உங்களைக் குறித்த குழுவின் தலைவராக இத்தால் நியமிக்கிறேன்.

மேலும், மேற்குறித்த விடயங்கள் சம்பந்தமாக, தேவையென உங்களுக்குத் தோன்றும் சகல விசாரணைகளையும் நடத்தவும் சகல ஆய்வுகளையும் செய்யவும், குறித்த குழுவினராகிய உங்களுக்கு இத்தால் அதிகாரமும் தத்துவமும் அளிப்பதோடு, உங்கள் விசாரணைகளின் விளைவுகளையும் உங்கள் சிபார்சுகளையும் கொண்ட அறிக்கையொன்றை உங்கள் ஒப்பங்களுடன் 1966 ம் ஆண்டு மே மாதம் பதினேழாம் நாளுக்கு முன் எனக்கு அனுப்பும்படியும் கேட்கிறேன் ;

மேலும், உங்கள் விவேகத்திற்கிணங்க, மேற்குறித்த விடயங்கள் சம்பந்தமாக நீங்கள் தீர்மானித்தற்கமைய எவ்விசாரணையின் பகுதியெதையும் பகிரங்கமாக நடத்தலாகாதென்றும் இத்தால் பணிக்கிறேன்.

மேலும், உங்கள் விசாரணைகளினதும் ஆய்வுகளினதும் நோக்கங்களுக்காக உதவியை அல்லது தகவலை நீங்கள் கேட்கும் சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் மற்றும் பேர்வழிகளும், அவர்களிடம் அதன் நிமித்தம் தக்கவாறு அளிக்கப்பட்டுள்ள முழு உதவியையும் சகல தகவல்களையும் அளிக்குமாறு இத்தால் கேட்பதோடு அவ்வண்ணம் செய்யும்படியும் இத்தால் பணிக்கிறேன்.

இத்தீவின் முத்திரையச்சின் கீழ் கொழும்பில் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினேழாம் நாளாகிய இன்று அளிக்கப்பட்டது.

அதி உத்தமரின் கட்டளைப்படி,

நி. விஜேவர்தன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

11-961

இலங்கை வாழைச்சேனை சிலோன் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.